தமிழக சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1968 ஆகஸ்ட் 20.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேற்று தள்ளி வைக்கப்பட்ட வினாக்கள் முதலிலே எடுத்துக்கொள்ளப்படும்.

எண்ணெய் வகைகள் ஏற்றுமதி

* 34 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்திலிருந்து என்னென்ன விதமான எண்ணெய், எந்த அளவு வெளிநாடுகளுக்கும், இதர ராஜ்யங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது ?

(இ) அதே போல் இறக்குமதி செய்யப்படுகிறதா ?

(உ) 1960 முதல் 1966 வரை, விபரம் ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) முதல் (உ) வரை: பேரவைமுன் விவர அறிக்கை ௨ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த விவர அறிக்கையில் நமது ராஜ்யத்திலிருந்து வெளிநாடுகளுக்கு ஏராளமான கடலை எண்ணெய் ஏற்றுமதி செய்யப்படுகின்றது என்று தெரிகிறது. அதோடு கடலையும் பிண்ணாக்குமாகப் போய்விடுகிறது. இதன் காரணமாக இங்கே அவற்றின் விலை உயர்ந்து மக்கள் பாதிக்கப் படுகிறார்கள் அல்லவா ? ஆகையால் அதைக் கட்டுப்படுத்துவதற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : வேர்க்கடலை, முழு வேர்க் கடலை ஆகியவை மத்திய அரசினுடைய நிபந்தனையின் பேரில் அவர்களுடைய ஆணைக்குட்பட்டுத்தான் ஏற்றுமதி செய்யப்படு கிறது. ஆகையால் கனம் உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறபடி கணிசமான அளவு ஏற்றுமதி ஆகவில்லை. ஏற்றுமதி ஆகவேண்டு மென்ற கோரிக்கைகள் மணிலா சாகுபடி செய்யக்கூடியவர்களிட மிருந்து, சாகுபடி செய்யக்கூடிய வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு,

---

௨ 416–419-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

கோவை, சேலம், பொள்ளாச்சி முதலிய பகுதியில் உள்ளவர்களிடமிருந்து வருகின்றன. சாகுபடி செய்கிறவர்களுக்கு ஏற்றுமதி செய்தால் போதுமான ஆதாயம் கிடைக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : மணிலா விலை இறங்கிவிட்டது. அதனால் அதைச் சாகுபடி செய்யக்கூடியவர்கள் ஸ்தம்பித்துப் போய்விட்டார்கள். எண்ணெய்வித்துக்கள் ஏற்றுமதி செய்ய வேண்டும். ஆனால் பிண்ணாக்கு முதலியவற்றை ஏற்றுமதி செய்வதை கட்டுப்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்போது பிண்ணாக்கு ஏற்றுமதி செய்வதில்லை. இதிலே இரண்டு கருத்துக்கள் இருக்கின்றன. எண்ணெய்ப் பொருள்கள் உபயோகிக்கக்கூடியவர்களுக்கு அவைகளினுடைய விலை உயராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அது ஒருவிதமான கருத்து. சாகுபடி செய்பவர்களுக்கு ஏற்றுமதியினால்தான் போதுமான ஆதாயம் கிடைக்கும் என்பது இரண்டாவது விதமான கருத்து. இந்த இரண்டு கருத்துக்களும் இரண்டு அங்கத்தினர்கள் கேட்டதிலிருந்து தெரிகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், பெரிய அளவிற்கு ஏற்றுமதி செய்கின்றவர்கள் ராலீ பிரதர்ஸ், வால்காட் பிரதர்ஸ், டாட்டா, பிர்லா போன்றவர்கள்தான் ஈடுபட்டு மார்க்கட்டை டௌன் செய்து குறைந்த அளவிற்கு வாங்கி பிறகு உயர்த்தக்கூடிய அளவிற்கு லாபத்தைக் கருதி வியாபாரம் நடத்தக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே, அதனுடைய விலையையாவது கட்டுப்படுத்தக்கூடிய அளவிற்கு மத்திய சர்க்காரை வற்புறுத்த உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல் எந்தப் பெரிய கம்பெனிகளையும் ஊக்குவிக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு செய்யப்படவில்லை. மணிலா விலை வீழ்ச்சி அடைந்ததன் காரணமாக அவர்களுடைய நிலைமை பாதிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய நிலைமையும் கவனிக்க வேண்டியிருக்கிறது.

தமிழக அமைச்சர்கள்-பிரதம அமைச்சர் சந்திப்பு

* 35 வினா.—**திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967 ஜூலை மாதம் தமிழக அமைச்சர்கள் பிரதம மந்திரியை டெல்லியில் சந்தித்து உணவு விவசாயத் துறையில் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ரூபாய் 100 கோடி திட்டத்திற்கு உதவி கோரினார்களா ?

(இ) அதன் முடிவு என்ன ?